*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*24 08-2025* *SUNDAY* *12.40 PM*
*ஆகாஷ்வாணி*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

*1)* *விண்வெளி வீரர்கள் பயணிக்கும் ககன்யான் விண்கலத்தை செலுத்த இந்தியா தயாராக உள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.*

*2)* *கடல்சார் துறைக்கென பிரத்யேக செயற்கைக்கோள் தொழில் நுட்பத்தை உருவாக்குவது குறித்து அரசு பரிசீலித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.*

*3)* *நிலக்கரி இறக்குமதி குறைக்கப்பட்டுள்ளதால் 60 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அந்நிய செலாவணி சேமிக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.*

*4)* *வட மாநிலங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*5)* *தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் ராவத் பட்டம் வென்றார்.*

*<u>இனி விரிவான செய்திகள் –</u>*

*<<<<<<>>>>>>*

*விண்வெளி வீரர்கள் பயணிக்கும் ககன்யான் விண்கலத்தை செலுத்த இந்தியா தயாராகி வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.*

*ககன்யான் விண்கலத்தில் பயணம் செய்வதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லா உள்ளிட்ட நான்கு வீரர்களுக்கு, புதுதில்லியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் அவர் பேசினார்.*

*விண்வெளித்துறையில் இந்தியா மிக வேகமாக முன்னேறி வருவதாக கூறிய அவர், ஏற்கனவே, சந்திரயான் மற்றும் மங்கல்யான் விண்கலங்களை அனுப்பியுள்ள நிலையில், அடுத்தக்கட்டமாக ககன்யான் பயணத்திற்கு ஆயத்தமாகி வருவதாக குறிப்பிட்டார்.*

*இந்தியாவின் இந்த முன்னேற்றம் வெறும் தொழில்நுட்ப சாதனையாக மட்டுமின்றி, சுயசார்பு இந்தியா என்ற இலக்கை அடைவதில் ஒரு புதிய அத்தியாயமாக அமையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.*

*விண்வெளி தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் முக்கிய நாடுகளில் ஒன்றாக இந்தியா உருவெடுத்துள்ளதாக குறிப்பிட்ட திரு ராஜ்நாத் சிங், இலக்கு பெரிதாக இருந்தால், நமது சாதனைகளும் அளவற்றதாக அமையும் என்று தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>>*

*அனைத்து மாநில சட்டப்பேரவை தலைவர்களின் மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, புதுதில்லியில் இன்று தொடங்கிவைத்தார்.*

*முதல் இந்திய சட்டப்பேரவைத் தலைவராக வித்தல்பாய் பட்டேல் பொறுப்பேற்றதன் நூற்றாண்டை கொண்டாடும் வகையில், தில்லி சட்டப்பேரவை இந்த இரண்டுநாள் மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளது.*

இதில், அனைத்து மாநில சட்டப்பேரவைகள் மற்றும் சட்ட மேலவைகளின் தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

<<<<<<>>>>>>

ஒருங்கிணைந்த வான் பாதுகாப்பு சாதனம் ஒடிசா கடற்பகுதியில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.
பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன விஞ்ஞானிகளின் இந்த சாதனைக்கு, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதனை உருவாக்கிய பாதுகாப்புப் படையினருக்கும் அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

கடல்சார் துறைக்கென பிரத்யேக செயற்கைக்கோள் தொழில் நுட்பத்தை உருவாக்குவது குறித்து அரசு பரிசீலித்து வருவதாக மத்திய கப்பல் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.
தனியார் செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், இந்த தொழில்நுட்பம், நாட்டின் துறைமுக மேலாண்மை கட்டமைப்பு மற்றும் கடல்சார் ஆளுகையை வலுப்படுத்த உதவும் என்றார்.
இந்த சாதனத்தை இந்திய கடலோரப் பகுதிகள், உள்நாட்டு நீர்வழிகள் மற்றும் துறைமுகப்பகுதிகளில் மட்டும் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்படுவதுடன், சரக்கு கப்பல் போக்குவரத்தை கண்காணிப்பதற்கான தரவுகளும் ஒருங்கிணைக்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.
மேலும், சுற்றுச்சூழல் பாதிப்புகளை கட்டுப்படுத்தவும், பேரிடர் மேலாண்மை மற்றும் தேடுதல் பணிகளுக்கும் இந்த தொழில்நுட்பம் உதவிகரமாக இருக்கும் என்று திரு சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

நாட்டில் நிலக்கரி இறக்குமதி குறைக்கப்பட்டுள்ளதால் 60 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அந்நிய செலாவணி சேமிக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.
ஹைதராபாதில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எஃகு தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் பாய்லர்களை இந்திய நிலக்கரியை பயன்படுத்துவதற்கு ஏற்ப மாற்றியமைக்கும்படி கேட்டுக்கொண்டிருப்பதாக கூறினார்.
நிலக்கரி மற்றும் இரும்புத்தாது உற்பத்தி அதிகரித்து வருவதாகவும், நிலக்கரியை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் அmவர் குறிப்பிட்டார்.
அமெரிக்கா விதித்துள்ள கூடுதல் வரி காரணமாக, உள்நாட்டு நிலக்கரி தொழில் நிறுவனங்களுக்கு பெருமளவில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்றும் திரு கிஷன் ரெட்டி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஃபிஜி பிரதமர் திரு Sitiveni Ligamamada Rabuka இந்தியாவில் மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வந்துள்ளார்.
வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு சுகந்த மஜூம்தார், விமான நிலையத்தில் அவரை வரவேற்றார்.
ஃபிஜி பிரதமருடன், அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சர் உள்ளிட்டோர் அடங்கிய உயர்நிலைக்குழுவும் புதுதில்லி வந்துள்ளது.

ஃபிஜி பிரதமர் திரு *Sitiveni Ligamamada Rabuka,* பிரதமர் திரு நரேந்திர மோடியை நாளை சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்புகளை மேம்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.
குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வையும் அவர் சந்திக்க உள்ளதாக வெளியுறவுத்துறையின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி ராஜ்குருவின் பிறந்த நாளையொட்டி மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மரியாதை செலுத்தியுள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தியாகி ராஜ்குருவின் துணிச்சல் மற்றும் நாட்டுப் பற்று இளைஞர்களுக்கு ஊக்கமளிப்பதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.
பகத்சிங் மற்றும் சுக்தேவுடன் இணைந்து நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட ராஜ்குருவின் தியாகம் என்றென்றும் நினைவுகூரப்படும் என்றும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

ஆன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்த மத்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைக்கு பல்வேறு தரப்பினரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பான புதிய சட்ட மசோதாவில் இடம்பெற்றுள்ள அம்சங்கள், ஆன்லைன் விளையாட்டுகளால் ஏற்படும் பண இழப்புகளை தடுக்க உதவும் என்று தமிழகத்தின் திருப்பத்தூரை சேர்ந்த கணினி பொறியாளர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

விநாயகர் சதுர்த்தி நாடு முழுவதும் வரும் 27-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டத்தில், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத விநாயகர் சிலைகள் தயாரிக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

பஞ்சாப் மாநிலம் *Hoshiarpur*-ல் சமையல் எரிவாயு டேங்கர் லாரி வெடித்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 7-ஆக அதிகரித்துள்ளது.

13 பேர் காயமடைந்த நிலையில், ஐந்து பேர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நான்கு சக்கர வாகனமும், சமையல் எரிவாயு டேங்கர் லாரிரும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவியும், காயமடைந்தவர்களுக்கு இலவச சிகிச்சையும் வழங்கப்படும் என்றுபஞ்சாப் மாநில அரசு அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

ஹரியானா, உத்தராகண்ட், குஜராத் உள்ளிட்ட வட மாநிலங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ராஜஸ்தானின் கிழக்குப்பகுதியில் அதிகனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீகார், ஜார்கண்ட், உத்தரப்பிரதேசம், இமாச்சலப்பிரதேசம், பஞ்சாப் மாநிலங்களின் ஒரு சில இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் கூறியுள்ளது.

இதனிடையே, ராஜஸ்தானின் கோட்டா மாவட்டத்தில் பெய்த கனமழையால் பல்வேறு இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

*பீகாரிலும் கனமழையால் பல்வேறு ஆறுகளில் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.*

*ஜம்முவில் கடந்த 24 மணிநேரத்தில் 19 சென்டிமீட்டர் அளவுக்கு பெய்த மழை காரணமாக, பசந்தார் கால்வாயில் நீர் மட்டம் அதிகரித்துள்ளதால், சம்பா மாவட்டத்திற்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.*

*கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.*

*மீட்புக்குழுவினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.*

*<<<<<<>>>>>>*

*விளையாட்டுச் செய்திகள்*

*தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் ராவத் பட்டம் வென்றார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 6-4, 6-2 என்ற செட் கணக்கில், ஜெர்மனியின் Markus Malaszszak -ஐ வென்றார்.*

*---------*

*டோராடுனில் நடைபெற்ற ஆசிய ஓபன் ஸ்கேட்டிங் போட்டியில் இந்தியா 9 தங்கம், 12 வெள்ளி, 18 வெண்கலம் உள்ளிட்ட 39 பதக்கங்களுடன் இந்தியா இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது.*

*------------*

*கஜகஸ்தானில் நடைபெற்று வரும் ஆசிய துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா 23 தங்கம், 8 வெள்ளி, 10 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.*

*----------------*

*அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி இன்று நியூயார்க்கில் தொடங்குகிறது.*

*---------------*

*பிரிஸ்பெயினில் நடைபெற்ற இந்தியா "ஏ" அணிக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா ஏ அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் பெற்றிபெற்றது.*

*<<<<<<END>>>>>>*